2026 அக்டோபர் 4; **பொதுக்காலம் 27-ஆம் ஞாயிறு**

எசாயா 5:1–7; பிலிப்பியர் 4:6–9; மத்தேயு 21:33–43

## முன்னுரை

ஒருமுறை சிறுவன் ஒருவன் தன் தாத்தாவுடன் சேர்ந்து ஒரு சிறிய திராட்சைக் கன்றை நட்டான். தினமும் காலையில் ஓடிவந்து, அது வளர்ந்துவிட்டதா என்று பார்ப்பான். சில நாட்கள் கழித்து, சலிப்போடு, "தாத்தா, இங்கு எதுவுமே நடக்கவில்லையே!" திராட்சை செடியை காணவில்லையே என்றான்.

தாத்தா புன்னகையோடு, "கனிகள் வெளியில் தெரிவதற்கு முன்னால், வேர்கள் அமைதியாக மண்ணுக்குள் வளரும்" என்றார். ஆண்டுகள் உருண்டோட, அந்த ஒற்றைக் கொடி தோட்டம் முழுவதையும் இனிப்பான திராட்சைப் பழங்களால் நிரப்பியது.

இன்றைய இறைவார்த்தை நமக்கு இறைவனின் திராட்சைத் தோட்டத்தைப் பற்றிப் பேசுகிறது

கடவுள் நமது அன்றாட வாழ்வை எத்துணை அன்போடு பராமரிக்கிறார் என்பதையும், நம்மிடம் அவர் எதிர்பார்க்கும் கனிகளையும் பற்றியும் நினைவூட்டுகிறது.

இறைவாக்கினர் எசாயா, இயேசு கிறிஸ்து மற்றும் புனித பவுல் அடிகளார் வழியே, நாம் பல நேரங்களில் கடவுளை ஏமாற்றினாலும், கடவுள் நம் மீது வைத்துள்ள நம்பிக்கையை என்றுமே கைவிடுவதில்லை என்பதை உணர்கிறோம்.

அதேவேளையில், நமது வாழ்வு எத்தகைய கனிகளைத் தருகிறது என்பதையும் நேர்மையோடு சிந்தித்துப் பார்க்க நாம் அழைக்கப்படுகிறோம்:

அன்பான, நீதியான, நன்றியுள்ள, அமைதியான கனிகளையா? அல்லது சுயநலம், கசப்பு, அலட்சியம் என்னும் புளிப்பான கனிகளையா?

இந்தத் திருப்பலியைத் தொடங்கும் வேளையில், நம்மைக் குணப்படுத்தி, சீரமைத்து, புதுப்பித்து, கனிதரச் செய்யும் ஆண்டவரிடம் நமது உள்ளங்களாகிய திராட்சைத் தோட்டத்தைத் திறப்போம். நமது பாவங்களை ஏற்றுக்கொண்டு, அவரது இரக்கத்தை மன்றாடுவோம்.

## மறையுரை

திராட்சைத் தோட்டங்களுக்குப் புகழ்பெற்ற ஒரு ஐரோப்பிய கிராமத்திற்குச் சுற்றுலாப் பயணி ஒருவர் சென்றார். அங்கிருந்த குறுகிய தெருக்களில் நடந்து செல்லும்போது, முதியவர் ஒருவர் பழைய கல்தவரைச் சீரமைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தார். சில கற்கள் மிருதுவாகவும் சில கற்கள் அழகாகவும் இருந்தன; சில கற்களோ உடைந்து, கரடுமுரடாக, முறையற்ற வடிவத்தில் இருந்தன.

ஆச்சரியமடைந்த அந்தப் பயணி, “ஏன் இந்த உடைந்த கற்களையெல்லாம் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்? இவற்றை எடுத்துவிட்டு புதிய கற்களைப் பயன்படுத்தலாமே?” என்று கேட்டார்.

அந்த முதியவர் புன்னகைத்து, புறக்கணிக்கப்பட்ட ஒரு கல்லை உயர்த்திக் காட்டி, “ஏனெனில், சில நேரங்களில் பயனற்றது என்று நாம் நினைக்கும் கல்தான், முழுச் சுவரையும் தாங்கிப்பிடிக்கும் பலமான கல்லாக இருக்கும்” என்றார்.

பிறகு மெதுவாக, “மனிதர்களின் வாழ்க்கையும் இப்படித்தான்” என்றார்.

இன்றைய இறைவார்த்தையின் மையக்கருத்தை இந்தச் சிறிய நிகழ்வு அழகாகப் படம்பிடித்துக் காட்டுகிறது.

இறைவாக்கினர் எசாயா ஒரு அன்பு பாடலை தொடங்கி, மெல்ல மெல்லப் புலம்பல் பாடலாக மாறும் ஒரு பாடலைப் பாடுகிறார்.

கடவுள் தம் திராட்சைத் தோட்டத்திற்காக எந்த உழைப்பையும் மீதம் வைக்காத ஒரு தோட்டக்காரராகச் சித்தரிக்கப்படுகிறார். நிலத்தைத் தோண்டி, கற்களை அகற்றி, மேன்மையான திராட்சைக் கொடிகளை நட்டு, காவல் கோபுரம் கட்டி, திராட்சை ஆலையையும் அமைத்தார். தோட்டம் இனிமையான பழங்களைத் தரவேண்டுமென்று அவர் சாத்தியமான அனைத்தையும் செய்தார். ஆனால், அது புளிப்பான திராட்சைகளையே தந்தது.

எசாயாவின் பாடலைக் கேட்ட எருசலேம் மக்கள் தொடக்கத்தில் மகிழ்ச்சியடைந்தனர். அறுவடைத் திருவிழாவின் போது ஒரு கலகலப்பான பாடலை அவர்கள் எதிர்பார்த்தனர். ஆனால் எசாயா அவர்கள் முன் ஒரு கண்ணாடியைப் பிடித்துக் காட்டினார். அந்தத் திராட்சைத் தோட்டம் வெறும் தோட்டம் அல்ல; அது இஸ்ரயேல் மக்கள். கடவுள் தம் மக்களின் மீது அனைத்தையும் முதலீடு செய்தார். ஆனால் நீதியை எதிர்பார்த்த இடத்தில் இரத்தக்களரியும், நேர்மையை எதிர்பார்த்த இடத்தில் அழுகுரலுமே எஞ்சின.

இன்றைய நற்செய்தியில் இயேசு இதே உருவகத்தை எடுத்துக்கொண்டு இன்னும் தீவிரமாகப் பேசுகிறார். தோட்டத்தின் உரிமையாளர் கனிகளைப் பெற்று வர ஊழியர்களை அனுப்பினார்; ஆனால் குத்தகைக்காரர்களோ அவர்களை அடித்து,

கல்லெறிந்து, கொன்றனர். இறுதியாக, "என் மகனையாவது மதிப்பார்கள்" என்று தம் சொந்த மகனை அனுப்பினார். ஆனால் குத்தகைக்காரர்கள் அந்த மகனையும் தோட்டத்திற்கு வெளியே தள்ளிப் படுகொலை செய்தனர்.

இயேசு இங்குத் தம்மைப் பற்றியே பேசுகிறார். எருசலேம் மதில்களுக்கு வெளியே இழுத்துச் செல்லப்பட்டு, சிலுவையில் அறையப்படவிருந்த அன்பார்ந்த திருமகன் அவரே.

கட்டடக் காரர்களால் புறக்கணிக்கப்பட்டு, பின் மூலைக்கல்லாக மாறிய கல் அவரே.

எசாயாவின் புத்தகத்திலும் நற்செய்தியிலும் உள்ள சோகம் என்னவென்றால், கடவுள் அன்பு செய்யத் தவறிவிட்டார் என்பதல்ல; மனிதர்கள்தான் அவருக்குப் பதிலளிக்கத் தவறினர் என்பதுதான்.

இருப்பினும், இவ்வளவு கடுமையான எச்சரிக்கைகளுக்கு நடுவிலும், கடவுளிடம் ஒரு வியக்கத்தக்க பண்பு உள்ளது:

கடவுள் தம் திராட்சைத் தோட்டத்தில் முதலீடு செய்வதை என்றுமே நிறுத்துவதில்லை.

மீட்பு வரலாறு முழுவதிலும், கடவுள் மனிதனைத் தேடி வந்துகொண்டே இருக்கிறார். இறைவாக்கினர்களை அனுப்பினார். தம் சொந்த மகனை அனுப்பினார். தூய ஆவியாரை அனுப்பினார். நிராகரிக்கப்பட்ட பிறகும், அவர் மனிதகுலத்தைக் கைவிடவில்லை.

“என் திராட்சைத் தோட்டத்திற்கு நான் செய்யாததை வேறு என்ன செய்திருக்க முடியும்?” என்ற இறைவனின் கேள்வி, இன்று நம்

ஒவ்வொருவரின் இதயத்திலும் எதிரொலிக்க வேண்டும்.

கடவுள் நம்மிடம் கேட்கலாம்: “நான் உனக்கு வாழ்வைத் தந்தேன். விசுவாசத்தைத் தந்தேன். உன்னை அன்பு செய்யும் மனிதர்களைத் தந்தேன். மீண்டும் தொடங்க வாய்ப்புகளைத் தந்தேன். நற்கருணையில் என் மகனையே தந்தேன். உனக்காக நான் செய்யாதது வேறு என்ன இருக்கிறது?”

ஆனால் கசப்பான உண்மை என்னவென்றால், நமது வாழ்வெனும் தோட்டம் இன்னும் பல நேரங்களில் புளிப்பான திராட்சைகளையே தருகிறது.

சமூகத்தில் இதைப் பார்க்கிறோம். தொழில்நுட்பமும் செல்வமும் நிறைந்த உலகத்தில் வாழ்கிறோம்; ஆனால் தனிமை, பதற்றம், வன்முறை, சுரண்டல், பிரிவினைகள் நிறைந்து காணப்படுகின்றன. சுயநலம், சிற்றின்ப மயக்கம், தீமையை நன்மை என்றும் நன்மையைத் தீமை என்றும் மாற்றிக் கூறும் போக்குகள் இன்று அதிகரித்துவிட்டன.

ஆனால், சமூகத்தைக் விரல் சுட்டிக் காட்டுவதற்கு முன், இன்றைய நற்செய்தி நமது சொந்த இதயங்களை உற்றுநோக்க அழைக்கிறது.

எனது வாழ்வு எத்தகைய கனிகளைத் தருகிறது?

அன்பு, பொறுமை, இரக்கம், நேர்மை, தூய்மை, தயவு, தாராள குணம் ஆகிய இறைவனுக்குப் பிடித் உன்னத கனிகளையா?

அல்லது கசப்பு, சுயநலம், அடிமைத்தனம், அலட்சியம், கவலை ஆகிய முட்களையா?

புனித பவுல் அடிகளார் இரண்டாம் வாசகத்தில் இதற்கான சரியான பாதையைக் காட்டுகிறார்.

பவுல் சிறையிலிருந்து இக்கடிதத்தை எழுதுகிறார் என்பது கவனிக்கத்தக்கது. தான் வாழ்வேனா அல்லது இறப்பேனா என்று தெரியாத சூழலிலும் அவர் எழுதுகிறார்:

“ எதைப்பற்றியும் கவலைப்படவேண்டாம்.”

கேட்பதற்கு இது சாத்தியமில்லாதது போல் தோன்றலாம். ஏனெனில் இன்று பலரும் கவலைகளால் களைப்படைந்திருக்கிறார்கள். சிலர் மது, பொழுதுபோக்கு, மிதமிஞ்சிய வேலை ஆகியவற்றில் கவலைகளை மூழ்கடிக்க முயல்கிறார்கள். சிலர் குடும்பம், சுகாதாரம், தனிமை, நிதி நெருக்கடி அல்லது எதிர்காலத்தைப் பற்றிய பயங்களை மௌனமாகச் சுமக்கிறார்கள்.

பவுல் அடிகளார்  இந்தப் போராட்டங்களை மறுக்கவில்லை. மாறாக, அவற்றை வைத்துக்கொண்டு என்ன செய்ய வேண்டும் என்று சொல்கிறார்:

“நன்றி மிகுந்த உள்ளத்தோடு இறைவனிடம் மன்றாடி, உங்கள் தேவைகளைத் தெரியப்படுத்துங்கள்.”

பவுல் அடிகளாரின் யதார்த்தமான வழிகாட்டுதலைக் கவனியுங்கள்: “உங்களுக்கு கவலைகளே இல்லை என்று அமைதியாக இருங்கள் என்று அவர் சொல்லவில்லை. “அவற்றை இறைவனிடம் கொண்டு வாருங்கள்” என்கிறார்.

எல்லா சூழ்நிலையிலும் கொண்டு வாருங்கள். விடாமுயற்சியோடு, நேர்மையோடு,

நம்பிக்கையோடு, நன்றியுணர்வோடு கொண்டு வாருங்கள். அது அனைத்தையும் மாற்றும்.

தன் மகனைப் பற்றி எப்போதும் குறை சொல்லும் ஒரு தாயின் கதை உண்டு. “அவன் என்னிடம் அன்பாகப் பேசுவதே இல்லை, என்னை வேலைக்காரியைப் போல நடத்துகிறான்” என்றார். திடீரென்று சற்று யோசித்து, “ஆனால்... சில வாரங்களுக்கு முன் ஒருநாள் என் மகன் என்னிடம் அன்பாக ஒரு வார்த்தை பேசினான்” என்றார்.

அதனைக் கேட்டுக்கொண்டிருந்த குரு, “அப்படியானால் அங்கிருந்தே தொடங்குங்கள். அந்த ஒரு தருணத்திற்காகக் கடவுளுக்கு நன்றி சொல்லுங்கள்” என்றார்.

இதுவே புனித பவுல் அடிகளாரின் ஞானம்.

நன்றியுணர்வு இதயத்தை மாற்றுகிறது.

நாம் தவறுகளை மட்டுமே பார்த்துக்கொண்டிருந்தால், நம் இதயம் கசப்படைந்துவிடும். ஆனால் எது உண்மையோ, எது நேர்மையானதோ, எது தூய்மையானதோ, எது அன்புக்குரியதோ அதைச் சிந்திக்கும்போது, நமக்குள்ளே ஒரு மாற்றம் நிகழ்கிறது.

இன்றைய ஊடகங்களும் சமூகமும் கோபத்தையும், எதிர்மறையான சிந்தனைகளையுமே அதிகம் பரப்புகின்றன. ஆனால் கிறிஸ்தவர்கள் தங்களது மனதைப் வித்தியாசமாகப் பழக்கப்படுத்த வேண்டும் என்று பவுல் அடிகளார் அழைக்கிறார்.

ஓர் ஆசிரியர் தேர்வுத் தாள்களைத் திருத்தும்போது, யாராவது ஒரு மாணவர் மிக அழகாகப் பதிலளித்திருந்தால், அதன் பக்கத்தில் பெரிய எழுத்துக்களில் “மிக நன்று!” என்று

எழுதுவார். மாணவர்கள் அதை என்றுமே மறக்கவில்லை. பெரும்பாலான ஆசிரியர்கள் பிழைகளை மட்டுமே சுட்டிக்காட்டினர், ஆனால் இந்த ஆசிரியர் நல்லதை எடுத்துக் காட்டினார்.

கடவுள் நம்மிடம் செயல்படுவதும் அப்படித்தான்.

ஆம், கடவுள் நமது பாவங்களைத் தெளிவாகப் பார்க்கிறார். ஆனால் அதே வேளையில், நமக்குள்ளே இருக்கும் மறைமுகமான நன்மை, சிறிய அன்பின் செயல்கள், யாருக்கும் தெரியாத தியாகங்கள், தளராத விசுவாசம் ஆகியவற்றையும் அவர் பார்க்கிறார்.

நாம் அனைவரும் என்றாவது ஒரு நாள் “கடவுளிடமிருந்து பாராட்டைப் பெறுவோம்” என்று பவுல் அடிகளார் கூறுகிறார்.

கடவுளே நம்மிடம் உள்ள நல்லதைப் பார்க்கிறார்!

அதனால்தான் இயேசு பாவிகளைக் கைவிடவில்லை. அவர் தோல்விகளுக்கு அப்பால், இறைஅருள் செய்யக்கூடிய மாற்றத்தைப் பார்த்தார்.

இதுவே, தம்மைப் புறக்கணிக்கப்பட்ட கற்களாக உணரும் நம் அனைவருக்கும் நம்பிக்கையைத் தருகிறது.

இங்குள்ள யாராவது ஒருவர் தம்மைப் பயனற்றவராக, மறக்கப்பட்டவராக அல்லது தோல்வியடைந்தவராக உணரலாம். எதிர்பார்ப்புகளின்படி வாழ முடியவில்லையே என்று வருந்தலாம்.

இன்றைய நற்செய்தி சொல்கிறது:

புறக்கணிக்கப்பட்ட கல், மூலைக்கல்லாக மாறும்.

வாழ்வை மறுசீரமைப்பதில் கடவுள் வல்லவர்!

தோல்வியிலிருந்து நற்கனிகளையும், பதற்றத்திலிருந்து அமைதியையும், ஏமாற்றத்திலிருந்து நம்பிக்கையையும் அவரால் கொண்டுவர முடியும். உடைந்த மனிதர்களைத் தம் அருளின் ஊற்றாக மாற்ற அவரால் முடியும்.

ஆனால் அதற்கு, நாம் அவரை நமது வாழ்வெனும் திராட்சைத் தோட்டத்திற்குள் அனுமதிக்க வேண்டும்.

உரிமையாளருடன் எதிர்த்து நிற்பதை நிறுத்த வேண்டும். இந்த வாழ்வு நமக்கு மட்டுமே சொந்தமானது என்று நினைப்பதை நிறுத்த வேண்டும். கிறிஸ்து நம்மைச் சீரமைக்கவும், குணப்படுத்தவும், புதுப்பிக்கவும் இடம் கொடுக்க வேண்டும்.

அவ்வாறு நமது கவலைகளையும், காயங்களையும், தோல்விகளையும் கடவுளிடம் ஒப்படைக்கும்போது,

“மனித அறிவெல்லாம் கடந்துநிற்கும் கடவுளின் அமைதி நமது இதயங்களைப் பாதுகாக்கும்.”

அமைதி என்பது சிக்கல்கள் எதுவுமே இல்லாமல் போவது அல்ல; புயலின் நடுவிலும் இதயத்தில் இருக்கும் ஆழமான அமைதி. உலகத்தால் தர முடியாத அமைதி.

**இறுதியாக ஒரு நிகழ்வு:**

ஒரு பழைய ஆசிரமத்தின் திராட்சைத் தோட்டம் கடுமையான புயலினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. கிளைகள் முறிந்தன, கொடிகள் பிடுங்கப்பட்டன, கற்கள் சிதறின. ஓர் இளம் துறவி, “இது இனி மீண்டு வராது” என்றார்.

வயதான தோட்டக்காரர் குனிந்து, உடைந்த ஒரு கொடியைக் கையில் எடுத்து, “தோட்டத்தை பற்றி அவசரமாக மதிப்பிடாதே... வேர்கள் இன்னும் உயிருடன் இருக்கின்றன” என்றார்.

அதுவே இன்றைக்கான செய்தி.

சில நேரங்களில் நமது வாழ்வெனும் தோட்டம் உடைந்ததாகத் தோன்றலாம். திருச்சபை காயப்பட்டதாகத் தோன்றலாம். உலகம் பாழடைந்ததாகத் தோன்றலாம்.

ஆனால் வேர்கள் இன்னும் உயிருடன் இருக்கின்றன!

ஏனெனில் கிறிஸ்து உயிரோடு இருக்கிறார். புறக்கணிக்கப்பட்ட கல் மூலைக்கல்லாக மாறிவிட்டது. ஆண்டவர் இன்னமும் தம் திராட்சைத் தோட்டத்தில் உலா வருகிறார். அவர் நமக்கு அருகில் இருக்கிறார். நமது வாழ்வில் கனிகளைக் காண்பதற்காக அவர் பொறுமையோடு தொடர்ந்து செயலாற்றுகிறார்.

எனவே இன்று மூன்று வரங்களுக்காக மன்றாடுவோம்:

1. கடவுள் நமக்குச் செய்த அனைத்தையும் உணர்ந்து அறியும் வரம்.

2. கடவுள் விரும்பும் நற்கனிகளைத் தரும் வரம்.

3. புறக்கணிக்கப்பட்ட கற்களையும் கடவுளின் கரங்கள் மூலைக்கல்லாக மாற்றும் என்ற நம்பிக்கையின் வரம்.

ஆமென்.

Prepared by: **Fr. Paul Julian,** Perth ,Australia

Translated by: **Leonard Arulandhu,** Holy Family Church, Chennai